**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.292/2023**

**வா.சா.1. முருகேசன்**

**நாள். 19.09.2025**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி தன்னுடைய எதிர் வழக்குரையில் எனக்கும் திருப்பூரைச் சேர்ந்த லெட்சுமணன் மகன் பெரியசாமிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது என சொல்லியிருக்கிற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பெரியசாமி யார் என்றே தெரியாது. பெரியசாமிக்கு உதவி செய்வதற்காக என் பெயரில் 65 லட்ச ரூபாய்க்கும் என் மகன் பெயரில் ரூ.50 லட்சம் புரோநோட் வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. பெரியசாமியையும், லெட்சுமணனையும் தெரியாது. மேற்படி வழக்குகள் தவிர்த்து பிரதிவாதி பாலசுப்பிரமணியன் பெயரிலும், அவரின் மனைவி பெயரிலும் என் தூண்டுதலின் பேரில் கணேசன்அய்யாவு பெயரில் ரூ.40 லட்ச ரூபாய் மதிப்பிற்கும், ராமசாமி பெயரில் ரூ.30 லட்ச ரூபாய் மதிப்பிற்கும் காசோலை வழக்குகள் குற்றவியல் ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

கணேசன் அய்யாவு, ராமசாமி ஆகியோர்களை பழக்க, வழக்கத்தின் பேரில் எனக்கு தெரியும். கொடுக்கல், வாங்கல் பற்றி எனக்கு தெரியாது. கணேசன் அய்யாவு, ராமசாமி ஆகியோர்கள் திண்டுக்கல்லை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. கணேசன் அய்யாவு, ராமசாமி ஆகியோர்களுக்கு ஒட்டன்சத்திர IOB வங்கியில் கணக்கு ஆரம்பிப்பதற்குரிய விண்ணப்பம் (Introduction form) அறிமுக கடிதம் என் மகன் கொடுத்திருக்கிறார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கணேசன் அய்யாவு, ராமசாமியும் எனக்கு 10 வருடங்களாக தெரியும். அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருவார்கள், போவார்கள் அதனால் தெரியும். பிரதிவாதியின் குடும்பம் எனக்கு குடும்ப நண்பர்கள் என்ற சூழ்நிலையிலும் தாவா புரோநோட்டான வா.சா.ஆ.1. ஆவணத்தில் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சாட்சி கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் சாட்சி கையொப்பம் போடும்படி நான் கேட்கவும் இல்லை. பிரதிவாதி பாலசுப்பிரமணியனே புரோநோட்டை எழுதி கொண்டு வந்து கொடுத்தார்.

ரூ.65 லட்ச ரூபாய் பெரிய தொகை என்றும் அதற்கு ஆதரவாக அடமானம் எதுவும் வாங்கினீர்களா என்றால் நான் வாங்கவில்லை, இரண்டு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக சொன்னதால் நான் வாங்கவில்லை. பிரதிவாதி என்னிடம் 24.01.2021 அன்று ரூ.65 லட்சம் வாங்கவில்லை என்றும் அந்த தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்த கடமையும் இல்லை என்றும் அதனால் இந்த தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா செலவுத் தொகையை நான் திருப்பி செலுத்த வேண்டும் என்றால் தவறு.

**மறுவிசாரணை- இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.19 19:14:55 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.